**அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2010**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றிநிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாகஅம்புலுவாவ திசாநாயக்க முதியான்சேலாகே ஜயரத்ன வழிபாட்டு நிலையம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டிடத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானநிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களுடன் அந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஐந்தொகையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறையல்லாத மற்றும் நடைமுறை என வகைப்படுத்தப்படாமல் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முறையான கணக்கீட்டுக் கட்டமைப்பொன்று செயற்படுத்தப்படாமை,பிரதான நிதி மூலங்களின் பதிவேடு, உரிய பயன்பாட்டு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படாமையால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீது நம்பிக்கை கொள்ளல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(அ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் 03 சந்தர்ப்பங்களில் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால், அம்புலுவாவ நிதியத்திற்கு வழங்கியிருந்த ரூபா 3,135,000 தொகையான பணம் கணக்கீடுசெய்யப்பட்டிருக்காமை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிதியத்திற்குசெந்தமானரூபா 4,670,000 கூட்டுத்தொகையான02 கட்டிடங்களின் பெறுமதிநிலையானசொத்துக்களிலிருந்துகைவிடப்பட்டிருந்தமை.

(இ) பொது நம்பிக்கை பொறுப்பாளரிடமிருந்து கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றுள்ள மீதி சான்றுறுதிப்படுத்தல்களின் பிரகாரம் நிதியத்தின் மூலதன மற்றும் வருமான செலவினங்களுக்காக முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 10,288,096 தொகை செலவிடப்பட்டுள்ளதாகவும், அத் தொகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வாறானதொரு நிலைமை வெளிப்படுத்தப்பட்டிருக்காமை.

(ஈ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,795,813 தொகையான மூலதன செலவினம் வருமானச் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமை.

(உ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பெறவேண்டிய ரூபா 993,000 தொகையான தொலைபேசி கோபுர தளவாடகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை.

(ஊ) அம்புலுவாவ நிதியத்திற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளரால் 2009 ஒக்தோபர் 25 ஆந் திகதி இலங்கை சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 15,000,000 தொகையான நிலையான வைப்புகளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அட்டுறுவான ரூபா 875,000 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 189,050 தொகையான செலுத்த வேண்டிய பூங்கா ஊழியர் சம்பளம் ஆண்டின் செலவினமாகவும், ரூபா 19,942 தொகையான செலுத்த வேண்டிய மின்சாரப் பட்டியல் செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை.

(ஏ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட பூங்கா ஊழியர் சம்பளம் ரூபா 184,150 மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பில் அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் முன்வைக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | முன்வைக்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| தளபாடங்கள் | 1,500,000 | (i) பட்டோலை<br>(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| பொது நம்பிக்கை பொறுப்பாளர் நிதியம் | 15,000,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| வங்கி மீதி (9837674) | 1,246,669 | (i) வங்கி கணக்கிணக்கம் |
| வங்கி மீதி (6512857) | 759,801 | (ii) மீதி உறுதிப்படுத்தல்கள் |
| நிரமாணச் செலவினம் | 509,470 | மதிப்பீடுகள் |
| கொள்வனவுகள் | 163,910 | பட்டியல்கள் |

(ஆ) விவசாய தாகபையினை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,000 பெறுமதியுடைய பொருட்களுக்காக ரூபா 34,725 தொகையான பணம் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இந்த பணம் செலுத்தப்பட்டது எந்த நிறுவனத்திற்கு அல்லது யாருக்கு என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) அம்புலுவாவ உயிர்ப் பல்வகைமை கட்டிட நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2009 ஒக்தோபர் 02 ஆந் திகதிய குழுக் கூட்டத்தின் தீர்மானம் இலக்கம் I | வருடமொன்றுக்கு 12 கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், 2010 ஆம் ஆண்டில் 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) திறைசேரி பிரதிச் செயலாளரின் பீஎவ்/423 ஆம் இலக்க மற்றும் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின், | |
| 04.3 ஆம் பந்தியின் (அ) முதல் (உ) வரையான பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கை, நிதியப் பாய்ச்சல் கூற்று, திரண்ட நிதியத்திலான மாற்றங்களை காட்டும் கூற்று, பிரதான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான விரிவான குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. | நிதிப்பிரமாணம் 395 | மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| ii. | நிதிப்பிரமாணம் 756 | வருடாந்தபொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை. | போதியளவான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் தேறிய வருமானம் ரூபா 1,330,750 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய வருமானம் ரூபா 731,418 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 599,332 ஆன அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது.

### 3.2 வருமான நிர்வாகம்

அரசாங்க மானியம் ரூபா 10,500,000 பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த அனைத்து வசதிகளுடனும் கூடிய 02 சுற்றுலா விடுதிகள் நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்டதெனினும், மீளாய்வாண்டினுள் அவற்றின் வருமானமாக ரூபா 185,500 மாத்திரமே ஈட்டப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்புலுவாவ உயிர்ப் பல்வகைமை கட்டிடத் தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2009 இன் 44 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) முதல் (கே) வரையான 20 நோக்கங்களில் 03 நோக்கங்களை தவிர ஏனைய வெளிவாரியான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ii) மிகவும் அழகானகாட்சிகளுடன் கூடியஅம்புலுவாவ கண்டி - நுவரெலியா வீதியின் எல்லையில் அமைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் 620 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர்.

**4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியம் ரூபா 1,800,000 இனை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த கெபடேரியா வெதுப்பகம் அதற்காக பெறப்பட்ட உபகரணங்களுடன் வெளித்தரப்பினருக்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து எதுவித வருமானமும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) அம்புலுவாவ மாணவர் ஓய்வு அறையின் கோபுரத்திற்காக கலைரீதியான அம்சங்களை இணைத்த ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் ரூபா 107,745 தொகையான பணம் செலுத்த வேண்டியிருந்ததெனினும், அதற்காக இந்த நிதியத்திலிருந்து ரூபா 130,785 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தால் இனங்காணப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 23,040 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அம்புலுவாவ புத்தக மீளாய்வு மற்றும் எழுத்தாளரை மீளாய்வு செய்யும் நிகழ்விற்குரிய ரூபா 54,250 தொகையான உபசரணை செலவினத்தின் பட்டியல்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 20,000 முற்பணத் தொகைக்கு மேலதிகமாக ரூபா 46,250 செலுத்தப்பட்டமையின் காரணத்தால் ரூபா 12,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்புலுவாவ நுழைவாயில் அருகே ரூபா 1,270,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 03 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து ஆக்கபூர்வமான வருமானமொன்றினை ஈட்டுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க மானியம் ரூபா 10,000,000 இனை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் கூடிய மாநாட்டு மண்டபமொன்று நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதிலும் அதிலிருந்து எதுவித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதியம் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தாமதகாலம் 03 வருடங்களாகும்.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் திட்டம்

சபையின் கொள்வனவுகள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பில் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்
(ஆ) உள்ளக கட்டுப்பாடு
(இ) கணக்கீடு